நான் கிறிஸ்துவுக்குள் எல்லாம் செய்ய கூடும்

கர்த்தர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்.[1] ஆகையால் நான் கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட்டிருக்கிறேன்.[2]

கர்த்தர் என்னை வாலாக்காமல் தலையாக்குவார். நான் கர்த்தரின் கட்டளைகளை கவனமாய் கைக்கொண்டால், நான் எப்போதும் மேலே இருப்பேன், நான் ஒருபோதும் கீழாவதில்லை.[3] என்னை பெலப்படுத்துகிறவராலே என்னால் எல்லாம் செய்ய கூடும்.[4]

என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.[5]
நான் கர்த்தரை நம்பி இருக்கிறேன்; நான் நீர்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரத்தை போல் இருக்கிறேன், என் இலைகள் எப்போதும் பச்சையாய் இருக்கின்றன; வறட்சி காலத்தில் எனக்கு கவலை இல்லை, நான் தப்பாமல் கனி கொடுக்கிறேன்.[6]
நான் செய்வது எல்லாம் வாய்கின்றது.[7]

நான் இரவும் பகலும் தொடர்ந்து செல்ல, கர்த்தர் எனக்கு முன்னே சென்று என் வழியில் என்னை நடத்துகிறார்.[8]
என் தேவனால் ஒரு மதிலை தாண்டுவேன்.[9]

அவரை நான் விசுவாசிப்பதால் எல்லாம் கூடும்.[10]

தேவனுக்கு ஸ்தோத்திரம்.
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலம் அவர் எனக்கு ஜெயத்தை தருகிறார்.[11]

ஆமென்.

[1] சங். 147:5
[2] எபே. 6:10
[3] உபா. 28:13
[4] பிலி. 4:13
[5] 1 தெச. 5:24
[6] எரே. 17:7,8
[7] சங். 1:3
[8] யாத் 13:21
[9] சங். 18:29
[10] மாற்கு 9:23
[11] 1 கொரி. 15:57

சங்கீதம் 147:5
நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்; அவருடைய அறிவு அளவில்லாதது.

எபேசியர் 6:10
கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.

உபாகமம் 28:13
இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வார்த்தைகள் யாவையும் விட்டு விலகி வேறே தேவர்களைச் சேவிக்கும்படி, நீ வலதுபுறம் இடதுபுறம் சாயாமல்,

பிலிப்பியர் 4:13
என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.

1 தெசலோனிக்கேயர் 5:24
உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.

எரேமியா 17:7,8
கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்.

சங்கீதம் 1:3
அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.

யாத்திராகமம் 13:21
அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.

சங்கீதம் 18:29
உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.

மாற்கு 9:23
இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்.

1 கொரிந்தியர் 15:57
நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au